CC.No.107/2021
PW1 – செந்துாரான்
நாள் 30.06.2026, 12,35 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** அ.சா.2 எனது மைத்துனர் என்றால் சரிதான். அ.சா.2ம் ஆஜர் எதிரியும் ஒரே வீட்டில் உள்ள பெண்களை மனமுடித்தார்கள் என்றால் சரிதான். அரசு தரப்பு சாடசிப் பட்டியலில் 3வது சாட்சியாக உள்ள நாகநாத சேதுபதி என்னுடன் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். அ.சா.2க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே அவர்களது மாமனாரின் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுகிற அதே சமயத்தில் ஆஜர் எதிரியானவர் அவரை அ.சா.2ம், மற்றும் சில நபர்களும் சேர்ந்து தாக்கியதாக கடலாடி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்து அது குற்ற எண்.81/2021 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கும் இந்த நீதிமன்றத்தால் CC. 77/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

**2.** ஆஜர் எதிரியானவர் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது விளைவாக சிகிச்சையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ஆப்பனுார் சொந்த ஊர் என்றால் சரிதான். அ.சா2க்கு சொந்த ஊர் தேவர்புறம் கொட்டகை என்றால் சரிதான். போலீசார் விசாரித்தபோது எனது ஊர் தோப்புக்கொட்டகை என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு போலீசார் விசாரித்தபோது தோப்புக்கொட்டகை என்று நான் கூறியதாக ஆவணங்களில் இருந்தால் அது தவறு என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவமும் குற்ற எண்.81/2021 வழக்கு சம்பவமும், ஆப்பனுாரில் உள்ள ஜெய்ஹிந்த் நாதன் டீக்கடை முன்பு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த இரு சம்பவத்தின் போது தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது மணி இரவு 09.00 இருக்கும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான்.

**3.** எங்களுக்கும், ஆஜர் எதிரியின் தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு சண்டை வந்தது என்றால் சரிதான். நான் சண்டையை விலக்க தான்

செய்தேன். இருதரப்பினரும் ஆயுதங்கள் வைத்திருந்தார்களா என்றால் ஆமாம். அ.சா.2 கம்பு வைத்திருந்தார். எதிரி அருவாள் வைத்திருந்தார். ஜெயராம கணேசன் கற்களை வைத்து எறிந்தார். கார்த்திக் மற்றும் தினேஷ் ஆகியோர்கள் ஆயுதங்களை வைத்திருக்கவில்லை. அந்த வழக்கிலும் (CC.77/2024) நான் சாட்சியாக உள்ளேன் என்றால் சரிதான். ஜெயராமன கணேசன், கார்த்திக், முருகன் (அ.சா.2) மற்றும் தினேஷ் ஆகியோர்கள் ஆப்பனூர் பஞ்சாயத்தை சேர்ந்த வெவ்வேறு ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

**4.** அந்த கலவரத்தை நான் விலக்கிய போது தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் குடியிருப்பவர்களுக்கும் சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான். ஆனால் அவர்களை வழக்கில் சாட்சிகளான புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக தனியாக விசாரிக்கவில்லை என்றால் புகார் வாக்குமூலம் பெற்று சென்ற பிறகு விசாரிக்கவில்லை. கடலாடி காவல் நிலையத்தை தாண்டி தான் நான் கடலாடி மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். என்னை அ.,சா.2 தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனைக்கு சென்ற போது செவிலியர்கள் தான் எனக்கு சிகிச்சை அளித்தார்கள். மருத்துவர்கள் அப்போது இல்லை.

**5.** சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டு சமயம் என்பதால் யார் யார் எந்த ஆயுதத்தால் யாரை தாக்கினார்கள் என்பதை குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான். எனக்கு கையில் காயம் ஏற்பட்டதாக சொல்லப்படுகிற நிலையில் எப்படி அந்த காயம் ஏற்பட்டது என்று கூற இயலாது என்றால் அருவாள் பட்டது என்று தெரியும். ஆனால் யாரால் ஏற்பட்டது என்று தெரியாது. நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தேன். அப்போதும் மருத்துவர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**6.** நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் உண்மையில் ஆஜர் எதிரியை அ.சா.2 மற்றும் அவரது தரப்பினர் தாக்கியதால் அவருக்கு தான் காயம் ஏற்பட்டது என்றாலும் ஆனால் அ.சா.2 எனக்கு உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் சண்டை விலக்க சென்ற போது ஏற்பட்ட காயத்தை

வைத்து ஆஜர் எதிரிக்கும் எதிராக பொய்யாக புகார் அளித்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–திருமதி.தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
கடலாடி,